9. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *12-9-2011 (திங்கட்கிழமை) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 12-9-2011 (திங்கட்கிழமை) அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

12-9-2011 (திங்கட்கிழமை) அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 12-9-2011 (திங்கட்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.